**மனித உரிமை செயல்திட்டத்தின் மீது பொது மக்களிடமிருந்து அழைக்கப்படும் பிரதிநிதித்துவங்கள்**

அமைச்சரவையால் நிறுவப்பட்ட அமைச்சுக் கிடையிலான குழு ஒரு தேசிய மனித உரிமை செயல் திட்டத்தை உருவாக்கும் பொருட்டு 2016 - 2021 ஐந்தாண்டு வரையான காலத்திற்கு மனித உரிமைகள் செயல் திட்ட வரைபொன்றை செய்ய சிவில் சமூகம் மற்றும் ஆர்வமுள்ள அமைப்புகள் உட்பட அனைத்து பங்குதாரர்களிடமிருந்தும் அவதானிப்புக்கள் அல்லது நோக்குகளைப் பெறுவதற்கு தீர்மானித்துள்ளது.

அமைச்சரவையால் நெறிப்படுத்தப்பட்டதற்கிணங்க அவ்வாறு உருவாக்கப்பட்ட வரைபு செயற்திட்டம் 2016 ஒக்டோபர் இறுதியில் அமைச்சரவையால் கவனத்திற் கொள்ளப்படும். இந்நோக்கத்திற்காக ஓர் அர்ப்பணிப்பு இணைப்பு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் வலைப்பக்கத்தில் 2016 செப்டம்பர் 01 முதல் அமுழுக்கு வரும் வகையில் தொடங்கப்பட்டுள்ளது. இது www.mfa.gov.lk இல் அணுக முடியும்.

இந்த வலை இணைப்பானது பின்னணி, குழுக்களின் அமைப்பு, வரைவு செயல்முறைக்குப் பயன்படுத்தப்படும் கொள்கைகள், உட்பட விரிவான தகவல்களை வழங்குகிறது. கருப்பொருள்களின் கீழ் குறித்த தகவல்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

மனித உரிமை செயல்திட்ட அமைச்சுக்கிடையிலான குழு குறிப்பாக 14 செப்டம்பர் 2016 இற்கு முன் அனைத்திற்கு ஆர்வமுள்ள பங்குதாரர்களும் தங்களது அவதானிப்புகள் அல்லது நோக்குகளை அனுப்புமாறு கேட்கிறது. அவதானிப்புக்கள் அல்லது நோக்குகள் நேரடியாக பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும். nhrap.consultations@mfa.gov.lk

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு
2016 செப்டம்பர் 05
(முடிவு)